# சிங்கப்பூரில் ஜமால் முஹம்மது கல்லூரி பேராசிரியருடன் தகவல் தொழில்நுட்பக் கலந்துரையாடல்

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), 05-05-2012 அன்று, மாலை 5 மணி முதல் 7 மணி வரை, "தகவல் தொழில்நுட்பக் கலந்துரையாடல்" நிகழ்ச்சி ஒன்றை, ஜாலான் சுல்தான் சாலையில் அமைந்துள்ள சுல்தான் பிளாசாவில் சிறப்பாக நடத்தியது.

தகவல் தொழில்நுட்பத் துறையில் 24 ஆண்டுகள் அனுபவம் பெற்றவரும், திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியின் பேராசிரியருமான முனைவர் T அப்துல் ரஜாக், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

அதிநவீன விஞ்ஞான வளர்ச்சி கண்டுவரும் கணினியுகத்தில், சிங்கப்பூரில் மட்டுமின்றி உலக அரங்கில் தகவல் தொழில்நுட்பத் துறையில் உருவாகி வரும் மாறுதல்கள், வாய்ப்புகள் மற்றும் சவால்களைப் பற்றியும், அவைகளை போட்டித்திறன்மிக்க யுக்திகள் கொண்டு எவ்வாறு எதிர்கொள்ள லாம்? என்பது பற்றியும் இக்கலந்துரையாடலில் விவாதிக்கப்பட்டன.

சங்கத்தின் துணைச் செயலாளர் இத்ரிஸ் மாலிம் வரவேற்புரை வழங்க, சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்தார் சங்கத்தின் துணைத் தலைவர் முஹம்மது ஜின்னா. அமானுல்லாஹ் பொன்னாடை போர்த்த, சிறப்பு விருந்தினரின் 24 ஆண்டு கால உயர்கல்விச் சேவையைப் பாராட்டி நினைவுப் பரிசு வழங்கினார் சங்கத்தின் தலைவர் முஹிய்யத்தீன் அப்துல் காதர். முஹம்மது ஹனீபா தாஜுதீன் வாழ்த்துரை வழங்க, நிறைவாக நன்றி கூறினார் அப்துல் மாலிக். நிகழ்ச்சியை நெகிழ்ச்சியோடு வழிநடத்தினார் நிக்சன் செல்வராஜ்.

இச்சங்கத்தின் உறுப்பினர்களும் தகவல் தொழில்நுட்பத் துறை வல்லுநர்களும் கலந்துகொண்ட இக்கலந்துரையாடல், பயனுள்ள பல தகவல்களை பகிர்ந்து கொண்ட அரிய நிகழ்வாக அமைந்திருந்தது.



## தொழில் முனைப்பு கருத்தரங்கு

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), 22-04-2012 அன்று, காலை மணி 10 முதல் பிற்பகல் 1 மணி வரை, "சிங்கப்பூரில் சொந்தத் தொழில் துவங்குவது எப்படி?" என்ற தலைப்பில் பொதுமக்களுக்கான இலவச தொழில் முனைப்பு கருத்தரங்கு ஒன்றை, பீட்டி சாலையில் அமைந்துள்ள சிண்டா தலைமையக அரங்கத்தில் நடத்தியது.

சிங்கப்பூர் இந்திய வர்த்தகத் தொழிற்சபையின் தலைவரும், வர்த்தக ஆலோசகரும் கணக்காய்வாளருமான திரு R நாராயணமோகன், இக்கருத்தரங்கை சிறப்பாக நடத்தினார். லிட்டில் இந்திய வர்த்தகர் மற்றும் மரபுடைமைச் சங்கத்தின் தலைவர், தொழிலதிபர் திரு ராஜகுமார் சந்திரா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, தன் தொழில் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். இக்கருத்தரங்கை நிக்சன் செல்வராஜ் துவங்கி வைத்தார். அப்துல் நஜிர் அறிவிப்புகள் செய்ய, நினைவுப்பரிசுகளை வழங்கினார் சங்கத்தின் பொருளாளர் ஹிதாயதுல்லா. சங்கத்தின் உறுப்பினர்களும் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்ட இக்கருத்தரங்கு, தொழில் முனைப்பு பற்றிய விழிப்புணர்வையும், பயனுள்ள தகவல்களையும் வழங்கியது. சங்கத்தின் துணைப் பொருளாளர் கலந்தர் மொஹிதீன் நன்றி கூறினார்.